செ.வெ.எண்:80 நாள்:10.02.2018

**பத்திரிக்கை செய்தி**

**தமிழ்நாடு அரசு**
**கால்நடை பராமரிப்புத்துறை**

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கான தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் | மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வித்தகுதி | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை பராமரிப்பு உதவியாளர் | 62 | 10 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். | **Pay Scale Rs.4800 – 10000** தர ஊதியம் **Rs.1400/- (Pre revised)** |

காலிப்பணியிடங்கள் பெண்கள், முன்னுரிமை பெற்றவர்கள் , ஆதரவற்ற விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளடக்கியதாகும்.

விண்ணப்பதாரர்களின் வயது 01.07.2015 அன்று உள்ளபடி குறைந்த பட்சம் 18 வயது. அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வகுப்பினர்களுக்கு 35 ஆகும். 10, +2 தேர்வு பெற்றிருப்பின் அதிகபட்ச வயது 40 ஆகும். பட்டப்படிப்பு தேர்வு பெற்றிருப்பின் அதிகபட்ச வயது வரம்பு இல்லை.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) ஆகிய வகுப்பினருக்கு அதிகபட்ச வயது 32 ஆகும். 10, +2 தேர்வு பெற்றிருப்பின் அதிகபட்ச வயது 34 ஆகும். பட்டப்படிப்பு தேர்வு பெற்றிருப்பின் அதிகபட்ச வயது வரம்பு இல்லை

பொதுப் பிரிவினருக்கு அதிகபட்ச வயது 30 ஆகும்.

விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் **www.tirunelveli.nic.in** என்ற வலைத்தளத்தில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை **மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை மாவட்ட ஆட்சியர் வளாகம் , கொக்கிரகுளம் , திருநெல்வேலி – 627 009** என்ற முகவரிக்கு **23.02.2018 பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும். அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும்.** இதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிகளுக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். நேர்காணலில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் இனச்சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிகளுக்கான நேர்காணல் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவில் நடைபெறும்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி